1992 மார்ச் 18] [பேரவைத் தலைவர்]

நாளை காலையில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய மானியக் கோரிக்கைகள், நாளை மாலை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை, பேரவையின் முன்அனுமதியோடு அறிவிக்கின்றேன். நாளை மாலையிலும் பேரவை கூடும். மாலை 4 மணிக்குக் கூடும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (19–3–1992) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 12-46 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

23. 1972–ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசை மாற்று வாரியப் பணி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 17–9–1991 ஆம் நாளிட்ட 1202–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, [1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (அபிவிருத்தி மற்றும் அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

24. திருச்சிராப்பள்ளி, நாகமங்கலம் திருவாளர்கள் ஜெரிகோ பார்வையற்றோர்/உடல் ஊனமுற்றோருக்கான பயிற்சி மையத்திற்குச் சொந்தமான டி.எ.கே. 2582 மோட்டார் வண்டியை வாடகைக்கு அல்லது ஊதியத்திற்கு பயன்படுத்தாமல் தொண்டு நோக்கங்களுக்கு மட்டும் பயன்படுத்தும்வரை மேற்சொன்ன பயிற்சி மையத்தினால் செலுத்தப்படவேண்டிய வரியை 16–7–1991 முதல் சாதாரண வரி வீதத்தில் நான்கில் ஒரு பங்காக குறைப்பது குறித்து உள் (போக்குவரத்து) துறையின் 16—71971–ஆம் நாளிட்ட 1139–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை, [1974–ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

[1992 மார்ச் 18

25, இந்திய செஞ்சிலுவைச் சங்கத்திற்குச் (இலங்கை நிவாரணக் குழு) சொந்தமான ஏழு மோட்டார் வாகனங்களை வாடகைக்கு அல்லது ஊதியத்திற்கு பயன்படுத்தப்படாமல் தொண்டு நோக்கங் களுக்கு மட்டும் பயன் படுத்தும் வரை மேற்சொன்ன சங்கத்தின ரால் செலுத்தப்பட வேண்டிய வரியை 16—7—1991 முதல் சாதா ரண வரி வீதத்தில் நான்கில் ஒரு பங்காக குறைப்பது குறித்து உள் (போக்குவரத்து) துறையின் 16—7—1991—ஆம் நாளிட்ட 1141-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

ஆ. அறிக்கைகள் அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

26. மனுக்கள் குழுவின் ஆறாவது அறிக்கை, 1991—92.

தமிழ்நாடு சட்டப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS